ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.

**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. செ. மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்:1532/மாஒ6/SMC/ஒபக/2023-2024, நாள்: 22.09.2023**

**பொருள்** : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு – பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத் தீர்மானங்களை காந்தி ஜெயந்தி 02.10.2023 அன்று கிராம சபைக் கூட்டத்தின் கூட்டப்பொருளாக இணைத்தல் – சார்பு.

**பார்வை** : சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1680/A11/பமேகு/ ஒபக/2023, நாள்:19.09.2023.

***********

பார்வையில் காணும் சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க பள்ளி மேலாண்மைக் குழுவின் கூட்டமானது மாதந்தோறும் அனைத்து வகை அரசுப் பள்ளிகளிலும் நடைபெற்று வருகிறது. தொடர்ச்சியாக ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்திலும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பள்ளியின் தேவைகளை பகிர்ந்துகொண்டு வருகின்றனர்.

கிராமப் பஞ்சாயத்தின் நிலைக் குழுக்களில் ஒன்றான “கல்விக் குழுவும்” கல்வி வளர்ச்சிக்காகச் செயல்பட்டு வருகிறது. எனவே, பள்ளி வளர்ச்சிக்கானத் தீர்மானங்களை நிறைவேற்றிக் கல்வி வளரச்சிக்குக் கிராமப் பஞ்சாயத்துகளின் பங்களிப்பை முழுமையாக உறுதிசெய்ய பள்ளி மேலாண்மைக் குழு பங்காற்றி வருகிறது.

தொடர்ச்சியாகக் ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்திலும் பள்ளி வளர்ச்சி, கற்றல் கற்பித்தல், உட்கட்டமைப்பு, மாணவர் பாதுகாப்பு, பள்ளி இடைநிற்றல் மற்றும் உயர்கல்வி தொடர்பாகப் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களைப் பகிர்ந்துகொள்வது அவசியமாகும். இது பள்ளியின் அடிப்படைத் தேவைகளை கிராமப் பங்கேற்போடு மேம்படுத்த பெரும்பங்காற்றும். அதனடிப்படையில் வருகின்ற **2023, அக்டோபர் மாதம் 02_ஆம் தேதி காந்தி ஜெயந்தி தினத்தன்று** நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைப் பகிர்ந்து கொண்டு விவாதிப்பது சம்பந்தமாக கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றிட அறிவுறுத்தப்படுகிறது.

**வழிகாட்டுதல்கள்:**

1. 2023, அக்டோபர் 02_ஆம் தேதி (திங்கட்கிழமை) நடைபெறவிருக்கும் கிராம சபைக் கூட்டத்தில் பள்ளியின் சார்பில் தலைமையாசிரியர், ஆசிரியர், பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
2. பள்ளி வளர்ச்சி சார்ந்த தேவைகள், கற்றல் – கற்பித்தல் போன்றவை தொடர்பாக பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்டத் தீர்மானங்களை தொகுத்து மேற்காண்

2

தேதியில் நடைபெறும் கிராமசபைக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டு தகுந்த ஆலோசனைகளைப் பெறவேண்டும்.

3. கிராம சபைக் கூட்டத்தில், பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட தீர்மானங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் கிராமப் பஞ்சாயத்தும், மக்களும் தங்கள் பள்ளி சார்ந்த பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அறிந்து தங்களின் பங்களிப்பை அளிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.
4. நடந்து முடிந்த கிராம சபைக் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்ட தீர்மானங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை / முடிவுகளின் விவரங்களையும் கேட்டறிய வேண்டும். மேலும், எதிர்வரும் 06.10.2023 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டத்தில் விவரங்களைப் பகிர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும்.
5. பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் கிராம சபைக் கூட்டத்திலும் பள்ளி மேலாண்மைக் குழு முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் கருத்தாளர்கள் பார்வையாளர்களாக கலந்துகொள்ள வேண்டும்.

மேற்காண் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி 2023, அக்டோபர் 02_ஆம் தேதியன்று நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் தலைமையாசரியர், ஆசிரியர் பிரதிநிதி உள்ளிட்ட பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பங்குபெறுவதை மாவட்டக் கள அலுவலர்களான – மாவட்டக் கல்வி அலுவலர்கள் - இடைநிலை மற்றும் தொடக்கக்கல்வி, உதவி திட்ட அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், ஆசிரிய பயிற்றுநர்கள் மற்றும் TNEF – Fellow_க்கள் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

25/9/23

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

22/09/2023

25/9/23

**பெறுநர்:**

1. அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொறுப்பு), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து ஆசிரிய பயிற்றுநர்கள், வேலூர் மாவட்டம்.
4. பள்ளி மேலாண்மைக் குழு கருத்தாளர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்:**

1. சென்னை–06, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநில திட்ட இயக்குநர் அவர்களுக்கு பணிவுடன் அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை & தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம்,
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.